செ.வெ.எண்:36 நாள்: 21.12.2020

# அரியலூர் மாவட்டம்
# இணையதளம் வாயிலாக பொதுமக்கள் குறைதீர்நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், இணையதளம் வாயிலாக **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று **(21.12.2020)** நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பொது போக்குவரத்து, இ-பாஸ் ரத்து உள்ளிட்ட பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளதன் அடிப்படையில் பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் (https://ariyalur.nic.in)-ல் என்ற இணையதளத்தில் கூகுள் மீட் (Google Meet) என்ற இணைப்பு மூலம் (Online) காணொளி காட்சி வாயிலாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரை நேரடியாக தொடர்பு கொண்டு தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. மேலும் இணையவழி வசதி இல்லாத பொதுமக்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயல்பட்டுவரும் பொது சேவை மையங்களின் மூலம் தங்களது கோரிக்கைகள் மனுக்கள் அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் இன்று (21.12.2020) இணையவழி மூலம் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 97 மனுக்கள் இணையதளம் வழியாக பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக கனிவுடன் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. தொடர்ந்து, வாட்ஸ்சப் மூலமும் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

இன்றைய பொதுமக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் உடையார்பாளையம் வட்டம் எறவாங்குடி கிராமத்தை சேர்ந்த திரு.கலியபெருமாள் என்பவர் “தனது வயதான காலத்தில் தன்னுடைய மகன்கள் முறையாக பராமரிக்கவில்லை எனவும், மேலும், மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பெற்றோர்கள் நல்வாழ்வு சட்டத்தின்கீழ் அவர்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு, தான் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தினை இரத்து செய்ய வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தார்கள். இக்கோரிக்கை மனுவை பரிசீலித்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், இம்மனுமீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள, வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிட்டார்கள். அதனைத்தொடர்ந்து, வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, மேற்காணும் தான செட்மெண்ட் பத்திரத்தினை ரத்து செய்து, ஆணையிட்டார்கள்.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஏழுமலை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன் மற்றும் தொடர்புடைய பிறத்துறை அலுவலர்கள் இணையவழி வாயிலாக கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**